# கலிப்பாவின் முறைமையும் வளர்ச்சியும்

**ரா. சத்யா**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
நாமக்கல்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜுலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

**"ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென**
**நாலியர் றென்ப பாவகை விரியே" (தொல் – 140)**

என்னும் நால்வகைபாக்களாக இலக்கண நூலார் வகுத்துள்ளனர்

நால் வகைபாக்களுள் ஓசையால் சிறப்பு பெற்றது கலிப்பா. சீர், பொருள், இசை ஆகியவற்றால் எழுச்சியும், அழகும், விரைவும் பெற்று விளங்குவதால் "கலி" என்ற காரணப்பெயர் பெற்றது இதனை வணிகர்பா என்றும் கூறுவர்.

## பொதுவியல்

கலிப்பாவில் வெண்பா உரிச்சீர் மிகுதியாக அமைந்து வரவேண்டும், நேரீற்று இயற்சீர் இரண்டு தவிர பிற இயற்சீரும் நிரைமுதலாக கொண்ட வருவதை வலயுறுத்தியுள்ளார் தொகாப்பியர். வஞ்சிச்சீர்களும் ஓரளவு அருகி கலந்து வரும். கலித்தளை இப்பாவிற்கு இன்றியமையாதது. பிறசீர்கள் மயங்குவதால் பிறதளைகளும் விரவி வரும் என்பது வெளிபாடையானது என்பதை அறியமுடிகிறது.

## மூன்று வெண்சீர்களால் ஆன அடி

'பொடி யழற் புரந்தத்த பூவாப்பூம் பொலன் கோதைக்,
(கலி – 54.˙.2)

## நான்கு வெண்சீர்களால் ஆன அடி

'நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூறல் தான் நாணி'
(கலி – 44.˙.10)

## இரண்டு வெண்சீரும் நேரீற்று இயற்சீரும்

'மன்னா வுலகத்து மன்னுவது புரைமே கலி' (– 54.˙.20)

கலிப்பாவிற்குரியது நாற்சீரடி ஆகும், இருப்பினும், கலிப்பாவில் ஐஞ்சீரடி, அறுசீரடி, எழுசீரடி ஆகியனவும் கலந்து சங்கப் பாடல்களில் வந்துள்ளது இங்கு சான்றாக காட்டப்பட்டுள்ளது.

## இருசீரடி முச்சீரடி மயங்கல்

**சான்று**

(அ) அல்லற்படுவான் மலை ( கலி – 40-18 )
(ஆ) என்செய்வாங் கொல்இனி நாம் (கலி – 60-23 )

**ஐஞ்சீரடி, ஆறுசீரடி மயங்கல்**

**சான்று**

(அ) 'நெறியறி செறிகுறி புரிதிரி பரியா அறிவனை முந்துரீஇத்' (கலி - 39-46 )

(ஆ) 'பலவின் பழத்துள் தங்கும் மலைகெழு வெற்பனைப்' (கலி - 41-16 )

**தளை**

நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் இணைவது தளை எனப்பெறும் பாக்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக தளை கூறப்பெற்றது. கலிப்பாவிற்கு உரியது கலித்தளை.நின்றசீர் வென்சீராகவும் வருஞ்சீர் நிரை அசையாக வந்தால் கலித்தளை பிறக்கும் இதனை

**"நிரை முதல் வெண்சீர் வந்து நிரை தட்டல்**
**வரை நிலை இன்றே அவ்வடிக் கென்ப" (செய் 366)**

என்று கூறுகிறார் தொல்காப்பியர். கலிப்பாவில் கலித்தளை மட்டும்மின்றி பிறதளைகளும் பயின்று வருதல் உண்டு. வெண்டளையும் ஆசிரியத்தளையும் வரும் சிறுபான்மை வஞ்சித்தளையும் வருமென்று கூறுவார் இளம்பூரணர்.

**"தண்சீர் தனதொன்றிற் றன்றளை யாந்தண வாதவஞ்சி**
**வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த**
**வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்**
**ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமும் மொண்ணுதலே"**

என்று யாப்பிலக்கண நூலார் கூறுகிறார்.

**"வெண்சீர் இறுதிக்கு இணையசை பின்வரக்**
**கண்டன எல்லாம் கலித்தளை ஆகும்**
**தன்சீர் இரண்டு தலைப்பெயல் தம்முள்ஒத்து**
**ஒன்றினும் ஒன்றாது ஒழிபினும் வஞ்சியின்**
**பந்தம் எனப்பெயர் பகரப் படுமே"**

என்றார் காக்கைப்பாடினியார்

**சான்று**

**வெண்சீர் வெண்டளை**

'விரவுபெயல் நாடுநாட'; (41-5)

**இயற்சீர் வெண்டளை**

'இளமழை யாடும்' (41-25)

**நேரொன்றாசிரியத்தளை**

'நன்றா கின்றால்' (41-40)

**நிரையொன்றாசிரியதளை**

'புணர்நிலை வளகின்' (43-20)

**கலித்தளை**

'புல்லாராப் புனர்சிசியாற்' (45-10)

**ஓசை**

**'வெண்பா வகவற் கலிப்பா வளவடி வஞ்சியென்னும்**
**ஒண்பா வடிகுறல் சிந்தென றுறைப்ப வொலிமுறையே**
**திண்பா மலிசெப்பல் சீரசா லகவற்சென் றோங்குதுள்ளல்**
**நண்பா வமைந்த நலமிகு தூங்க னறுநுதலே'**

என்று யாப்பிலக்கண நூலார் நான்குவகை பாக்களுக்குரிய அடியும் ஓசையும் கூறியுள்ளார்

இதனை

**'துள்ளல் ஓசை கலியென மொழிப' (தொல் – 388)**

என்று தொல்காப்பியரும் கலிப்பாவுக்கு உரியது துள்ளல் ஓசை என்பதை உணர்த்துகிறது. துள்ளலோசை என்பது வழக்கியலால் சொல்லாது முரற்கைப் படுமாற்றால் துல்லிச்செல்லும் ஓசை என்று பேராசிரியரும், நச்சினார்கினியரும் இந்நூற்பாவிற்கு விளக்கம் கூறுவர். துள்ளுதலாவது ஒழுங்கு நடைத்தன்றி இடையிடை உயர்ந்து வருதல் "கன்று துள்ளிற்று" என்றாற்போலக் கொள்க என்று விளக்கம் தந்துள்ளார் இளம்பூரணர்

இவ்வோசைக்கு சான்றாக "அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்" (கலி-11) என்னும் பாலைக்கலிப்பாவின் அடியினை இளபூரணர் குறிப்பிடுவர். இப்பாடலில் "அரிதாய" "அறனெய்தி" என்னும் இரண்டு சீர்களும் நிரையசையில் தொடங்குகிறது பின்னர் முடியும் போது நிறையசில் முடிகிறது. அரிதாய என்னும் சொல் முதலில் நிறையசில் கனத்த ஓசையுடன் தொடங்கி பின் நேரசையில் தனிதொலிக்கிறது இவ்வாறு கனமான ஓசையில் உறத்தொலித்தபின் அவ்வொலி மெல்லியதாய் முடியும். இவ்வாறு கலியோசை தொடர்ந்துவரும் காரணத்தால் இப்பாடல் துள்ளலோசை உடையதாக திகழ்கிறது.

சங்க யாப்புநூலார் தலைகளின் அடிப்படையில் மேலும் மூன்று வகையாக பிரிப்பர். கலிதளையால் மட்டும் வரும் ஒசையை ஏந்திசைத் துள்ளல் என்றும் கலித்தளையுடன் வெண்டளையும் கலந்து வரும் ஓசையை அகவல் துள்ளல் என்றும் கலித்தலையுடன் பிறத்தளைகள் கலந்து வரும் ஓசையை பிரிந்திசைத்துள்ளல் என்றும் இதனை

**"ஏந்திசைத் துள்ளல் கலித்தளை இயையின்**
**வெண்டளை தன்தளை என்றிரண்டு இயைபின்**
**ஒன்றிய அகவல் துள்ளல் என்று ஓதுப**
**"தன்தளை பிறதளை என்றிவை அனைத்தும்**
**பொருந்தி வரினே பிரிந்திசைத் துள்ளல்"**

என்றார் அமிர்தசாகர்

மேலும் கலித்தளையுடன் இயற்சீர் வெண்டளை வந்தால் "அகவல் துள்ளல்" என்றும் கலித்தளையுடன் வெண்சீர் வெண்டளை வந்தால் "அகவல் துள்ளல்உடன் சேராது என ஆர்.எஸ். ஆர்.ஆச்சார்யா கூறுவர். எனவே அகவல் துள்ளலை மேலும் இரண்டு பிரிவாகப் பிரித்து இயசீர் வெண்டளை வந்தால் அகவல் துள்ளல் என்றும் வெண்சீர் வெண்டளை வந்தால் செப்பல் துள்ளல் எனவும் பகுத்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

**சான்று**

**என்திசைத் துள்ளல்**

'நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூறல் தான்நாணி' (கலி -44-10)

**அகவல் துள்ளல்**

'கண்ணார்ந்த நலத்தாரைக் துதுமெனக் கண்டவர்க்' (கலி – 60-5)

**செப்பல் துள்ளல்**

'அன்னையோ, மண்டமரட்ட கனிறன்னான் தன்னையொரு' (கலி – 4-18)

**பிரிந்திசை துள்ளல்**

'அணிமுக மதியேய்ப்ப அம்மதியை நனியேய்க்கும்' (கலி -64-10)

**நடை நலம்**

கலிப்பாவின் நடை வெண்பாவின் நடையை ஒத்ததாக அமைய வேண்டும். தொல்காப்பியர் கருத்துப்படி வெண்பாவும் கலிப்பாவும் நடை ஒப்புமையால் ஓரினத்தைச் சார்ந்தவை எனலாம். இதனை

**"ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை**
**வெண்பா நடைத்தே கலியென மொழிப" (தொல் – 413 )**

என்னும் நூற்பாவால் அறியலாம்.

**பாடுபொருள்**

தொல்காப்பியர் கலிப்பாவை அகப்பொருளைப் பாடுவதற்குரிய யாப்புகளில் ஒன்றாகக் கூறினார். கடவுளை வழிபடுவதற்குரிய கலிப்பாவின் வகைகளையும் தொல்காப்பியர் கூறியுள்ளார்.எனவே கலிப்பா தனக்குரிய பாடுபொருளாக அகப்பொருளையும் (காதல்) வழிபடுபொருளையும் (கடவுள்) குறித்தும் வரும். பாடுபொருளால் மட்டுமே ஒரு பா சிறப்பானதாக அமையும் நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்று வருபவை அனைத்தும் கலிப்பாவில் பாடுபொருளாக அமையும் புறத்திணைப் பொருளில் கலிப்பா வழங்க பெறுதல் இல்லை. வாழ்த்தியல் நான்கு பாக்களுக்கு உரியது. வாழ்த்தியல் வகைகளில் புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறுஉ, ஆகிய நான்கு பொருள்களும் கலிப்பாவும் வஞ்சிபாவுமாய் வராது இதனை

**"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்**
**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே**
**கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா" (தொல் -415)**

என்னும் தொல்காப்பிர் கூற்றின் மூலம் அறியலாம்.

**கலிப்பாவின் முறை வைப்பு**

கலிப்பாவனது, ஒத்தாழிசைக்கலிப்பா, கலிவெண்பாட்டு, கொச்சகக் கலிப்பா, உறல்கலிப்பா என்று கலிப்பா நான்கு வகைப்பெறும் இதனை

**"ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே**
**கொச்சகம்உறலோடு கலிநால் வகைத்தே" ( தொ – 435 )**

என்பதால் தொல்காப்பியர் முதலில் ஒத்தாலிசைக் கலிப்பாவிற்கு இலக்கணம் கூறுகின்றார் அதன்பின்னர் பிற கலிப்பா வகைகளைச் சுட்டுகிறார். இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக வைத்தமைக்குக் காரணத்தை உரையாசிரியர் தம் உரையில் கூறியுள்ளனர்

பெரும்பான்மை வழக்கு, சிறப்பு போன்ற காரணம்கருதி ஒத்தாழிசைக்கலிப்பா கலிப்பா முதற்கண் கூறபெற்றது. குலித்தொகையில் உள்ள நூற்றைம்பது பாடல்களில் அறுபத்தெட்டுப் பாடல்கள் ஒத்தாழிசைக் கலிப்பாவாக உள்ளன. எனவே இத்தகைய சிறப்புக் கருதி ஒத்தாழிசைக்கலிப்பாவின் வகைகளில் முன்னதாக இடம் பெற்றுள்ளன எனலாம் என பேராசிரியர் தம் உரையில் கூறியுள்ளார்.

**கலிப்பாவின் உறுப்புக்கள்**

வெண்பா, ஆசிரிப்பாவிற்கு இல்லாத சிறப்பு கலிப்பாவிற்கு உண்டு. பல உறுப்புகளை, பெற்றிருப்பதே, அச்சிறப்பிற்கு, காரணம் ஆகும். தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் அராகம், அம்போதரங்கம் ஆகிய உறுப்புகள் கலிப்பாவில் இடம் பெறுகின்றன. இவற்றுள் தரவு, தாழிசை முதமை உறுப்புகள் எஞ்சியவை துணை உறுப்புகளாகவும் இங்கு கூறப்படுகின்றன. .

**தரவு**

கலிப்பாவின் முதல் உறுப்பாக அமைந்து பாட்டின் தலைபகுதியாகத் திகழ்வது தரவு ஆகும். தரவு, எருத்து (பிடரி) என்னும் வேறு பெயர்களும் உண்டு. இது மூன்றடி சிற்றெல்லையும் வரையறை அற்ற பேரெல்லையும் உடையது இதனை

**"தரவே தானும் நாலடி இழியாய்**
**ஆறிரண்டு யர்வும் பிறவும் பெறுமே" (தொல்-438)**

என்பதன் மூலம் அறியலாம். இது முதற்கண் வரும் காரணத்தால் தரவினை ஆதிப்பாட்டு என்றும் கூறுவர். ஒரு கருத்தை கூற விரும்புவோன் சிலவற்றை பேசி தொடக்கம் செய்கிறான். அத்தோற்றவாய் பேச்சிலேயே அவன் மேலே கூறவிருக்கும் கருத்தை ஓரளவு தெரிந்து கொள்ளமுடியும் என இதனையே தரவு என்று அறியமுடிகிறது.

**தாழிசை**

இரண்டாம் உறுப்பாகக் உள்ளது. தாழ்ந்து ஒலிக்கின்ற இயல்புடையது என்பதால் தாழிசையென வழங்கபெற்றது. இதனை இடைநிலைப்பாட்டு என்றும் கூறுவர்.

**"இடை நிலைப் பாட்டே**
**தரவகப் பட்ட மரபின என்ப" (தொல் 439)**

என்னும் நூற்பா தரவிற்குக் கூறபெற்ற அடியில் சுருங்கி வருவது தாழிசை என சுட்டுகிறது.

தரவினை விடத் தாழிசை அடிகள் குறைவானதாக அமையும். இதன் சிற்றெல்லை இரண்டடியாகவும் பேரெல்லை நான்கடியாகவும் அமையும் எனலாம். ஒரு பொருள்மேல் ஒன்றோ அல்லது ஒரு பொருள்மேல் மூன்றடுக்கியோ வருவதாக அமையும். தாழிசை என்பதும் இடைநிலைப்பாட்டு என்பதும் ஒரு பொருட்கிளவியாகும். இடைநிலைப்பாட்டெனினும் தாழிசை எனினும் ஒக்கும் என்று இளம்பூரணர் உரை கூறுவர். தாழிசை தாழ்ந்த ஓசையன்றியும் வருதலுண்டு என்பதை விளக்கவே தொலகாப்பியர் இடைநிலைப்பாட்டு என்று சுட்டுகிறார். தரவு, சுரிதகம் என்னும் இரண்டு வகுப்புகளுக்கும் இடையில் வருவதால் இடைநிலைப்பாட்டுஎன்றும் தாழ்ந்து ஒழிக்கும் ஓசையுடையதால் தாழிசை என்றும் வழங்கபெற்றது என்று இதன் மூலம் அறியமுடிகிறது.

**தனிச்சொல்**

தனி சீராகவோ அல்லது அசையாகவோ பொருள் தொடர்புடையதால் தனித்து நிற்கும் சொல்லாதனின் தனிச்சொல் என்றானது. ஒரு பாடலின் பிற அடிகளை இணைக்கும் சொல்லாக வருகிறது பெரும்பாலும் தாழிசைகளை அடுத்தும் சுரிதகத்திற்கு முன்னதாகவும் அமையும் என்பர்

**"அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்**
**நடை நவீன் ரோமுகம் அன்கென மொழி" (தொல் - 440)**

என்பதில் தனிச்சொல் குறித்த விதியைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். தனிச்சொல், விட்டிசை, கூன், தனிநிலை, அசைநிலை, என பல பெயர்களால் அழைக்கப்படுகிறது என்று அறியமுடிகிறது. மேற்குறிப்பிட்ட நூற்பாவில் வரும் "அங்கு'' என்பதை அசைசொல்லாகக் கொண்டு எஞ்சிய பகுதிக்கு அடைநிலைக் கிளவியாகிய தனிச்சொல்,தாழிசை பின்னர் வரும் என்று உரை கூறுவர் இளம்பூரணர். இந்நூற்பாவில் ஆங்கென மொழிப என்பதற்குப் பதிலாக 'ஆங்கென கிளவி' என்பதைப் பாடமாகக்

கொண்டனர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும். தாழிசையின் பின்னர் ஆங்கு என்ற அசைச்சொல் தனிசொல்லாய் வரும் என்பது அவர்கள் கூறிய உரையாகும். தனியாக நின்று இணைப்புச்சொல்லாக வருவதால் தனிச்சொல் என்றும் முன்னும் பின்னும் பிற உறுப்புகளை அடைந்து வரும் காரணத்தால் அடிநிலை என்றும் அழைக்கப்பெற்றதை இங்கு அறியமுடிகிறது.

**சுரிதகம்**

கலிப்பாவின் முதல் உறுப்பாகிய தரவு முன்னுரை போன்று அமையும் தாழிசை கருத்தை விளக்கி கூறும் வகையில் அமைகிறது. முடிவில் இடம்பெறும் தொகுப்புரை அல்லது முடிவுரை போன்றது. நீர்ச்சுழி போன்று சுருங்கிப் பொருளை முடிப்பதால் சுரிதகம் எனலாம் இதனை.

**“போக்கியல் வகையே வைப்பெனே படுமே**
**தரவியல் ஒத்தும் அதனகப் படுமே**
**புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே” (தொல்-441)**

என்பதால் அறியலாம் போக்கு, அடக்கியல். வாரம், வைப்பு என்னும் பிற பெயர்களாலும் சுரிதகம் வழப்படுகிறது.

**“தந்துமுன் நிற்றலின் தரவே தாழிசை**
**ஒத்தா ழத்தின தொத்தா ழிசையே**
**தனிதர நிற்றலின் தனிநிலை குனிதிரை**
**நீர்ச்சுழி போல நின்றுசுரிந் திருத்தலின்**
**சோர்ச்சியில் புலவர் சுரிதகம் என்ப” (தொல் -30)**

என்பதால் உறுப்புக்களின் விளக்கம் குறித்து அறியலாம். உள்ளுறுப்பின் பொருள் எல்லாம் ஒரு வகையான் அடக்கும் இயல்பிற்றாகலின் அடக்கியல் எனவும் குறித்த பொருளை முடித்துப் போக்குதலிற் போக்கு எனவும் அவை எல்லாம் போதந்து வைத்தலின் வைப்பு எனவும் எல்லாம் ஒவ்வொன்றனை ஒத்த பெயராயின ‘தரவு’ தாழிசை பொருளை முடிவுரை போலத்தொகுத்து கூறும் வகையில் அமைவதை சுரிதகம் எனலாம்.

**எண்**

எண் என்னும் உறுப்பு அம்போதரங்கம் என்றும்அழைக்கபெறும் அம்பு என்பது நீர். தரங்கம் என்பது அலை. என்ற பொருள் பெறும். நீரலை போலத் திகழும் தன்மைஉடையது என்பதால் எண் என்ற உறுப்பினை அம்போதரங்கம் என்று அழைத்தனர் என்று அறியமுடிகிறது. தோன்றும் இடத்து பெரியதாய் உருவெடுத்துக் கரையை அடையும் போது குறைந்து போவது அலையின் இயல்பு என்பதை போல பல உறுப்புக்களும் முறையே சுருங்கியும் ஒரோவழிப் பெருகியும் முடியும். கடைக்கண் விருந்து நீர்த்தேக்கம் பெறலின் அம்போதரங்கம் என அழைக்கப்பெற்றதை உணரமுடிகிறது

நாற்சீரடி, முச்சீரடி, இருசீரடியாக, தாழிசைக்கும், தனிசொற்கும் இடையிலோ அராகத்திற்கும். தனிசொற்கும் இடையிலோ நிற்பது அம்போதரங்கம் என்னும் உறுப்பு எண் இரண்டியாய் இரண்டும் ஓரடியால் நான்கும், சிந்தடியால் எட்டும் குறளடியால் பதினாறும் வரும் என்பர் இளம்பூரணர். எண் என்பது நாற்சீரடியில் இருந்து சுருங்கிமுச்சீரடியாகும், முச்சீரடியாகவும், இருசீரடியாகவும் சுருங்கி வருதலால் இதனை

**‘முதற்றோடை பெருகிக் சுருங்குமன் எண்னே’ (தொல் – 448)**

என்றது தொல்காப்பியம். நான்கடியாக வருவது பேரென், மூன்றடியாக வருவது சிற்றேன்,இருசீர் வருவது இடையெண் ஒருசீரால் வருவது சிற்றேன் என்று அழைக்கப்பெறும் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்ட உறுப்பு என்பதால் என் எனவும் அழைப்பர். இதனை அசையடி, பிரிந்திசைக்குறள் சொற்சீரடி, எண் என்பவை அம்போதரங்கத்தின் வேறு பெயர்களாகும்.

**கொச்சகம்**

கொச்சகம், கொய்சகம் எனும் பெயரால் வழங்கப்பெறுவது. இவ்வுறுப்பு கொச்சகம் என்னும் பெயர் உலக வழக்கு, யாப்பிலக்கணத்தில் பெற்ற செல்வாக்கினை உணர்த்துவதாக அமைகிறது. கொச்சக உடைபோலப் பெரும்பான்மையும் திரண்டு வருவது கொச்சகம் ஆகும்.

**'கொண் பொலாம் துகிலசைந்த கொச்சகம்' (தோலா – சூளா – பா 1755)**

என்பதால் அறியலாம்

**கலிப்பாவின் வகைகள்**

கலிப்பாவின் வகைகள் பற்றி யப்பியலார்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றது. யாப்பிலார்களின் பகுப்பு முறைகளையும் கலைச்சொற்களையும் மனத்திற் கொண்டு அமைப்பியல் அடிபடையில் கலித்தொகையில் உள்ள கலிப்பாக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளது, அவ்வகைகள், எல்லாம் ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, உறழ்கலி, கொச்சகக்கலி என்று பகுக்கப்பட்டுள்ளன.

இதனை

**"ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே**
**கொச்சகம் உறலொடு கலிநால் வகைத்தே"**

என்ற தொல்காப்பிய நூற்ப சுட்டுகிறது

**ஒத்தாழிசைக்கலி**

ஒத்துத் தாழ்ந்து இசைக்கும் மூன்று தாழிசைகளை அல்லது பாட்டுகளை இடையுறுப்புகளாகப் பெறும் காரணத்தால் ஒத்தாழிசைக்கலி என்னும் பெயர் பெற்றது.

இந்த கலிவகையில் மேற்கூறப்பட்ட தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்கு உறுப்புகளும் வரிசை பிறமாமல் வரும் 11 பாடல்கள் குறிஞ்சி கலியில் இடம் பெறுகின்றன. மேலும் இரண்டாகப் பகுத்து தாழிசைப்பகுதியில் கூன் பெறாமல் வரும் பாடல்கள் "நேரிசை ஒத்தாழிசை'' என்ற பிரிவிலும் தாழிசையில் கூன் பெற்று வரும் பாடல்கள் "விட்டிசை ஒத்தாழிசை'' என்ற பிரிவிலும் அடக்கியுள்ளனர் என்று இதன் மூலம் அறியமுடிகிறது. இதனை அவற்றுள் ஒத்தாழிசை கலி இரு வகைத்தாகும் என்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் அறியமுடிகிறது. கபிலர்பாடல்களில் நேரிசை ஒத்தாழிசைக் கலி இடம் பெறும்முறை ஈரடி ஒத்ததாழிசைகளைப் பெற்று பாடல்கள் எதுவும் இல்லை மூவடி ஒத்தாழிசைகளைப் பெற்று ஒரு பாடல் நாலடி ஒத்தாழிசைகளைப் பெற்று 10 பாடல்கள் வருகின்றன. ஐந்தடி ஒத்தாழிசை பாடல்கள் ஒன்றும் இல்லை நேரிசை ஒத்தாழிசைக் கலி பாடல்களில் மொத்தம் (11) பாடல்கள் வருகின்றன.

விட்டிசை ஒத்தாழிசைக்கலி சீர் நாற்சீரடிக்கும் கூனாக வரும் என்று தொல்காப்பியர் கூறுவார் எனவே தாழிசைக்கு முன்னோ அல்லது இடையிலோ சீர் கூனாக வந்தாலும் அப்பாடல்களை ஒத்தாழிசைக் கலிப்பாவாகவே கருத வேண்டும். இவ்வகை ஒத்தாழிசைக் கலியை ''விட்டிசை ஒத்தாழிசை" என்று அழைக்கலாம். இவ்வகைக்கலியனை நச்சினார்கினியர் கொச்சகக்கலினுள் அடக்கினாலும் இளம்பூரணார் ஒத்தாழிசைக் கலியினுள் அடக்குவார். இங்கு இளம்பூரணார் கருத்தை ஏற்றுகூறுகின்றனர். குறிஞ்சிக் கலியில் விட்டிசை ஒத்தாழிசைக் கலி இல்லை.

**வெண்கலிப்பா**

வெண்பாபோல இருக்கும் கலிப்பா வெண்கலிப்பா கலிப்பாவின் தன்மையினை கொண்ட ஒரு பாடல் ஈற்றடி வெண்பாவை போல முச்சீரடியால் வருவது வெண்கலிப்பா.

பேராசிரியரும் நச்சினார்கினியரும் தம் உரையில் கலிதொகையில் எட்டு கலிவெண்பாட்டுகள் வந்துள்ளன என்பர் ஏ.சி செட்டியார் இதனை மூன்றாகப் பிரிப்பார். அதுவே

1. முழுவதும் வெண்பா யாப்பில் அமைந்த பாடல்
2. ஆசிரியம் கலந்த வெண்பா யாப்பில் ஆனவை
3. ஆசிரியம் கலி வெண்பா ஆகிய பாக்களில் அமைப்பு கூறுபாடுகளை கொண்டது என்று விளக்குகின்றனர்

முதலில் குறிப்பிட்டவை முழுவதும் வெண்பா யாப்பில் அமைந்தவை. இரண்டவதாக கூறியதும் வெண்பா யாப்பில் அடங்கும். ஏனெனில் அவற்றில் ஆசிரியம் கலக்க வில்லை.

**சான்று**

37,65 என்ற என்னுள்ள பாடல்களில் தையால் என்ற சொல் நேரசைக்கு முன் வந்து நேரொன்றாசிரியதளையைத் தருவதாகக் கருதுவர் ஏ.சி செட்டியார். தையால் என்ற சொல் விளியேற்ற வடிவம் அதனை அளபெடையுடன் "தயா அல்" என்று எழுதவேண்டும். இக்கருத்தினை நச்சினார்கினியர், பெருமலைப் புலவர் உரைகளின் மூலம் அறியமுடிகிறது. “தையா அல்’’ என்பதே உண்மையான வடிவம் என்பதால் அது மூவசைச்சீர் வடிவத்தைத் கொண்டதால் காய்முன்நேர் வெண்சீர் வெண்டளை அமையும் ஆதாலால் இதனை வெண்பாவினுள் அடக்கலாம். பன்னிரண்டு அடிக்கு மேற்பட்ட அடிகளையுடைய,5,பாடல்களைக் கலிவெண்பாவாகவும் பன்னிரண்டும் அதற்கு கீழ்ப்பட்ட அடிகளையுடைய பாடல்களை நெடுவெண்பாகவும் கொள்ளலாம்.

**உறழ்கலி**

நாடகமாந்தர்களின் உரையாடல் போன்று கூற்றும் மாற்றமுமாகச் சுரிதகமின்றி அமைவது "உறழ்கலி" என்றும் இதனை,

**“கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்**
**போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே’’**

என்று தொல்காப்பியர் மூலம் அறியமுடிகிறது சில இடங்களில் உறழ்கலி தரவும் சுரிதகமும் பெற்றுவரும் என்று நாச்சினார்கினியர் தம் உரையில் கூறுவார். ஆனால் உறழ்கலியின் முக்கியக் கூறாகக் சுரிதகமின்மை ஏ.சி செட்டியார் கருதிகிறார்

பேராசிரியரும், நாச்சினார்கினியரும் கலித்தொகையில் 5 பாடல்களை, உறழ்கலிக்கு (60 87 91 113 114) எடுத்துகாட்டாகக் கூறுவர். இளம்பூரணார் (87) பாடல் உறழ்கலி என்பர், நச்சினார்கினியர் இப்பாடல் கலிவெண்பவாகக் கொள்வார். 88 ஆவது பாடலை நச்சினார்கினியர் கலிவெண்பாவாகக் கூறுவார். பெரும்மலை புலவர் உறழ்கலியாக கூறுவார். இவ்வாறு உரையாளர்களிடையே உறழ்கலிப்பாக்கள் பற்றிக் கருத்து வேறுபாடு காணப்படுகிறது.

உறழ்கலிகள் எல்லாம் பெரும்பாலும் வெண்பா யாப்பிலே அமைந்துள்ளன எனவே தரவு உரையாடல் சுரிதகம் ஆகியனவும் வெண்பாவிலே உள்ளன.

**கொச்சகக் கலி**

கொச்சவம் (கொய்சகம்) போன்று பாட்டுக்கள் அமைந்து வருவதால் கொச்சகம் எனப் பெயர் ஏற்பட்டதாகக் கூறுவார்.பேராசிரியர்

**“தரவும் போக்கும் இடையிடை மிடைந்தும்**
**ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்**
**வெண்பா இயலான் வெளிப்பத் தோன்றும்**
**பாநிலை வகையே கொச்சகக் கலியென**
**நூல்நவில் புலவர் நுவன்றுரைத் தனரே’’**

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புகளை நிரலாகப் பெறாத பாட்டுக்கள் கலிப்பாவில் தொடங்கி வெண்பாவினால் இறாத வெண்கலிப்பாக்கள் மாந்தரின் உரையாடலைத் தனித்தனிப் பத்திகளில் கொண்டிராத பாட்டுக்கள் எல்லாம் கொச்சக்கலி என்ற பகுப்பிற்குள் சேர்க்கப்படுகின்றன. அதாவது ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, உறழ்கலி, ஆகியவற்றுள் அடங்காத குறிஞ்சிக்கலிப் பாடல்கள் 7 கொச்சகக் கலிப் பாடலாக உள்ளன. உறையாடர்பாங்கு இல்லாத கொச்சகக்கலி "இன்னிசைக் கொச்சகக்கலி" என்றும் உரையாடல் பாங்கு உள்ள கொச்சகக்கலி 'உறழ் கொச்சகக்கலி' என்றும் இரண்டாகப் பகுத்து ஆராயப்பட்டுள்ளது.

## முடிவுரை

கலிப்பா நடை ஒப்புமையில் வெண்பா இணத்தை சேர்ந்தவை. கலிப்பாவிற்குரிய ஓசை துள்ளலோசை ஆதலால் ஓசை மிகுதிடைய பாவாக கூறப்படுகிறது, ஒத்தாழிசைக்கலிப்பா, கலிவெண்பாட்டு, கொச்சகக்கலிப்பா, உறழ்கலி என கலிப்பாவை நான்கு பிரிவாகப் பிரிப்பர் என்பதை தொல்காப்பியர் கூற்றின் மூலம் அறியமுடிகிறது. தொல்கப்பியார் கூறிய உறழ்கலியை யாப்பருங்கலம் ஆசிரியர் கூறாமல் மூன்றாக கூறியுள்ளார். கலிப்பாவிற்குரிய உறுப்புகளாக தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், கொச்சகம், அராகம் கூறப்பட்டுள்ளதை இந்த ஆய்வின்மூலம் அறியமுடிகிறது. தொல்கப்பியார் கூறாமல் விட்ட பாவினங்கள் பற்றி யாப்பருங்கலம் விரிவாக பேசுகிறது. கலிப்பாவிற்குரிய பாடுபொருளாக அகப்பொருளையும் வழிபடுபொருளையும் தொல்காப்பியர் கூறுகிறார் என்பதையும் இவ்வாய்வின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது

## துணை நூற்பட்டியல்

1. வேங்கடசாமி நாட்டார், ந.மு., யாப்பருங்கலக் காரிகை, கழக வெளியீடு, சென்னை.
2. மருதூர் அரங்கராசன், இலக்கண வரலாறு பாட்டியல் நூல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. தாமோதரம் பிள்ளை, சி.வை., வீரசோழியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. சுந்தரமூர்த்தி, இ., ஐந்திலக்கணம், நியூசெஞ்சுரி புக்கவுஸ்(பி)லிமி டெட், சென்னை.
5. பாலசுந்தரம், ச., தொல்காப்பியம் (பொருளதிகாரம் செய்யுளியல்-மரபியல்) சேலம்.
6. புலியூர் கேசிகன், தொல்காப்பியம் பாரிநிலையம், சென்னை.
7. சுப்பிரமணியம், ச.வே., யாப்பட்டியல், உலகத் தமிழாராய்சி நிறுவனம் சென்னை,
8. இளவரசு, சோ.ம., இலக்கணத்தொகை, இலக்கண வரலாறு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்